# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர் : 11 இதழ் : 06 ஜூன் 2025 தனிப்பிரதி – ரூ.20/– ஆண்டு சந்தா ரூ.200/–

Vol : 11 Issue No : 06 June 2025 Single Copy – Rs.20/- Annual Subscription Rs.200/-




# தீங்கைக் காணாதிருப்பாய்

செப்பனியா 3:15

# வேலை கிடைத்தது, சொந்த வீடு கட்டினோம்!



எனக்கு அன்பரின் ஊழியத்தைப் பற்றி தெரியாது. அருகில் இருந்த ஒரு சகோதரி அன்பரின் ஊழிய பத்திரிக்கையை எனக்கு கொடுத்தார்கள். அதன் மூலம் அன்பரின் ஊழியத்தை அறிந்து கூட்டத்திற்கு வர ஆரம்பித்தேன். என் மகன் படித்து முடித்து 32 வயது வரை வேலை இல்லாமல் கஷ்டப்பட்டான். பல முயற்சிகள் செய்தும் வேலை கிடைக்க வில்லை. ஒரு முறை கூட்டத்திற்கு வந்து Dr. ஆனந்த ஸ்திரா அவர்களிடம் என் மகனுடைய வேலைக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். ஐயா பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். கர்த்தர் அற்புதமாக என் மகனுக்கு இரங்கினார். தற்பொழுது தூத்துக்குடியில் AEO ஆக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறான். அருகில் உள்ளவர்கள் எல்லாம் இவனுக்கா வேலை கிடைத்திருக்கு என ஆச்சரியப்படும் வகையில் கர்த்தர் உதவி செய்துள்ளார்.

அதன்பின் சொந்த வீடு வேண்டும் அதற்காக ஜெபிக்கும்படி அன்பரின் ஊழியத்திற்கு கடிதம் அனுப்பினேன். ஐயாவிடமிருந்து பதில் கடிதம் வந்தது. ஆண்டவர் இடம் வாங்கி வீடு கட்ட உதவி செய்தார். இத்தனை அதிசயங்கள் செய்த கர்த்தரை மனதார துதிக்கிறேன். எங்களுக்காக ஜெபிக்கிற ஐயா குடும்பத்தினருக்கு நன்றியை கூறிக்கொள்கிறேன். **திருமதி. அன்ன குஞ்சரம், காரைக்குடி.**



# அன்பரின் ஊழியம்

மலர் 11 ஜூன் 2025 இதழ் 6


## உங்கள் ஆசிரியரிடமிருந்து.....



கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் பிரியமான பங்காளர்களை அன்போடு வாழ்த்துகிறேன்.

**சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தம் பண்ணுங்கள், அவரே உங்கள் பயமும், அவரே உங்கள் அச்சமுமாயிருப்பாராக. ஏசாயா 8:13.** இஸ்ரவேல் ஜனங்கள் கண்ணால் காண்கிற அனைத்தையும் கண்டு பயந்து வாழ்ந்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் காலத்தில் வாழ்ந்த குறி சொல்லுகிறவர்கள், பிற தேசத்து தேவர்கள் மற்றும் உலகப்பிரகாரமான மனிதர்களுக்கு பயந்து கர்த்தரை விட்டுவிட்டார்கள். **அவ்வாறு பயப்படுவது உங்களுக்கு கண்ணியாக அமைந்துவிடும் என்பதை ஏசாயா தீர்க்கதரிசி மூலம் இஸ்ரவேல் மக்களுக்கு கர்த்தர் சொல்லுகிறார். இதேப்போல நாமும் சில நேரங்களில் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும், உலக பிரகாரமான மனிதர்களுக்கும், சூழ்நிலைகளுக்கும் பயப்படுகிறோம். இதை தவிர்த்து கர்த்தரை நம் நம்பிக்கையாக வைத்து வாழும்போது கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து ஆச்சரியமாக நடத்துவார்.**

கடந்த மாதத்தில் கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற சிலுவை பெருவிழாவை கர்த்தர் ஆசீர்வதித்தார். அதேப்போல திருச்சியில் நடைபெற்ற விடுதலைப் பெருவிழாவையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். இந்த பெருவிழாவிற்கு ஸ்பான்சர் செய்த பங்காளர்கள் அனைவருக்கும் எங்களுடைய நன்றியை தெரிவிக்கிறோம்.

மே மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களுக்காகவும் கர்த்தரை ஸ்தோத்தரிப்போம். ஜூன் மாதம் மார்த்தாண்டம், திருநெல்வேலி, ஹைதராபாத், நாசரேத், திருச்சியில் நடைபெறயிருக்கிற கூட்டங்களுக்காக ஜெபியுங்கள். இந்த கூட்டங்களை நடத்துவதற்கு உங்கள் குடும்பத்தின் சார்பாக ஸ்பான்சர் செய்து உதாரத்துவமாய் தாங்குங்கள்.


ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

**சந்தா விபரம்**

இந்தியா: ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-
வெளிநாடு: ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-



காலை 8:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை

ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : +91 9488845627

தெலுங்கு: +91 9944536343

மலையாளம்: +91 9488932937

e-mail: info@mojindia.org Website: www.ministryofjesus.in

முகவரி: அன்பரின் ஊழியம், 40 S.P.K. தெரு, உறையூர், திருச்சி – 620 003
Address: Ministry of Jesus, 40 S.P.K. Street, Woraiyur, Trichy – 620 003

**ஜூன் 14–ம் தேதி மாலை டெலிவரன்ஸ் சர்ச் மூலம் நடைபெறயிருக்கிற உங்கள் விடுதலையின் இரவு கூட்டத்திற்கு திருச்சியில் உள்ள பங்காளர்கள் அனைவரும் தவறாமல் வாருங்கள். அந்த நாளில் அற்புதங்களையும் அதிசயங்களையும் காண்பீர்கள்.**

**இந்த மாதம் உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவரும் புதிய கல்வியாண்டிற்குள் செல்கிறார்கள். கர்த்தர் தாமே அவர்களை ஆசீர்வதித்து ஞானத்தினால் நிறைத்து நல்ல சுகத்துடன் வழிநடத்த ஜெபிக்கிறேன். பிள்ளைகள் விரும்புகிற பாடப்பிரிவுகளை எடுத்து படிக்க நீங்கள் உற்சாகமூட்டுங்கள்.**

எங்கள் அப்பா, அம்மா இருவருடைய நல்ல சுகத்திற்காகவும், கர்த்தரே அவர்களுக்கு பெலனாக இருந்து ஒவ்வொரு நாளும் பெலப்படுத்தவும் தொடர்ந்து ஜெபியுங்கள். ஊழியத்திலும், திருச்சபை பணிகளிலும் கர்த்தர் தாமே எங்களை வல்லமையாக பயன்படுத்தவும், எங்களுடைய நல்ல சுகத்திற்காகவும் ஜெபியுங்கள். கர்த்தருடைய கிருபையும் சமாதானமும் உங்களோடு இருப்பதாக!


**கிறிஸ்துவின் பணியில்**

**Dr. ஜேன் ஜாஷ்வா,**

jane@mojindia.org


## அன்பரின் ஆறுதல் தொலைக்காட்சி நிகழ்ச்சி நேரங்கள்

தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

NAMBIKKAI TELEVISION

வெள்ளி, சனி, ஞாயிறு

**8:30PM to 9:00PM**

தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

ARADHANA TV

வியாழன், வெள்ளி

**7:00PM to 7:30PM**

## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**

Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**

Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**


Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**

ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in



# தீங்கை காணாதிருப்பாய்!

தேவ செய்தி
Dr.ஆனந்த ஸ்திரா

**கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார்.**
**இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார், இனித் தீங்கைக் காணாதிருப்பாய்.**
**செப்பனியா 3:15**

எனக்கு மிகவும் பிரியமான பங்காளர்களே, அன்பு சகோதர, சகோதரிகளே, நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் உன்னத நாமத்தில் உங்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாத செய்தியின் வாயிலாக உங்களை சந்திப்பது சந்தோஷம். இந்த செய்தி உங்களுக்கு அதிக பிரயோஜனமாக இருக்கும் என நம்புகிறேன்.

**செப்பனியா 3:12–15** வரையுள்ள வசனங்களில் "இனித் தீங்கைக் காணாதிருப்பாய்" என்ற வேத வசனத்தை இந்த மாத செய்திக்கு ஆதாரமாக எடுத்துக்கொள்வோம். இஸ்ரவேல் ஜனங்களில் மீதியாயிருப்பவர்களைப் பார்த்து கர்த்தர் சொன்ன வார்த்தையே, இனித் தீங்கை காணாதிருப்பாய் என்பதாகும். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை விட்டு அந்நிய தெய்வத்தை பின்பற்றி சென்றபொழுதும், கர்த்தரின் பார்வைக்கு அருவருப்பானவற்றை செய்தபொழுதும், கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போன பொழுதும் பல தீங்கான காரியங்கள் அவர்கள் வாழ்வில் நடைபெற்றது. **நீங்களோ உங்களுடைய எல்லாத் தீங்குகளுக்கும் நெருக்கங்களுக்கும் உங்களை நீங்கலாக்கி ரட்சித்த உங்கள் தேவனை இந்நாளிலே புறக்கணித்து, ஒரு ராஜாவை எங்கள்மேல் ஏற்படுத்தும் என்று அவரிடத்தில் கேட்டுக்கொண்டீர்கள்.... (1சாமு.10:19)**

தீங்கே இல்லாத ஒரு இடம் உண்டென்றால் அது பரலோகம் மட்டுமே. அங்கு அழுகை இல்லை, தீங்கு இல்லை, சாவு இல்லை, பசி, தாகம் இல்லை. **என் பரிசுத்த பர்வத மெங்கும் தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை, ஏசாயா 11:9. அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார், இனி மரணமுமில்லை, துக்கமு மில்லை, அலறுதலுமில்லை, வருத்தமு மில்லை, முந்தினவைகள் ஒழிந்து போயின என்று விளம்பினது. வெளி.21:4.** நம் கர்த்தர் தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணன் என **ஆபகூக் 1:13** சொல்லுகிறது. **மத்தேயு 6:13-ல்** தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும் என இயேசு ஜெபிக்க கற்றுத்தருகிறார். கர்த்தரோ உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக்காத்துக்கொள்ளுவார் என **2தெச.3:3 –ல்** எழுதப்பட்டுள்ளது.

நம் அன்றாட வாழ்வில் எதிர்பாராத நேரத்தில் வியாதியினால் விபத்தினால் இயற்கை பேரழி வினால் பல்வேறு தீங்குகளை சந்திக்கிறோம். அதே நேரத்தில் மனிதர்களுடைய பாவத்தினாலும் தீங்குகள் வருகிறது. நல்லவர்களுக்கும் எதிர் பாராத நேரத்தில் தீங்குகள் வருகிறது. கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்களுக்கும் தீங்குகள் வருகிறது.

இதனால் ஏற்படுகிற மன சஞ்சலங்கள் மிகுதி. இவற்றைக் குறித்து உங்களுக்கு எழுதுகிறேன்.

## பாவத்தினால் வருகிற தீங்குகள்!

**தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந் தார். யோனா 3:10**

ஈராக்கில் 30 வருடங்களுக்கு முன்பு நதியின் ஓரத்தில் ஒரு Golden சிலை உண்டு. அது யோனாவின் சிலை. யோனாவின் அப்பா பெயர் அமித்தாய். அவனை ஏசபேல் கொன்றதி னிமித்தம் யோனாவின் தாய் இஸ்ரவேலை விட்டு சாரிபாத்துக்கு ஓடிப்போகிறாள். அவர்களுடைய மகன்தான் யோனா. நினிவே பட்டணத்து மக்கள் செய்த அக்கிரமச்செயல்கள் தேவ சமூகத்தை வந்து எட்டியது. அதனால் யோனாவை அங்கு அனுப்புகிறார். அவர்கள் தங்கள் மனம்போன போக்கில் வாழ்ந்தவர்களாக இருந்தார்கள். வலது கைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் தெரியாதவர்களாக அறியாமையில் இருந்தவர்கள்.மக்கள் இன்றும் அறியாமையில் வாழ்ந்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். உதாரணமாக அநேக மேற்கத்திய நாடுகளில் இப்படிப்பட்ட (identity crisis) மிகப்பெரிய ஒரு அறியாமை மக்கள் மத்தியில் நிலவுகிறது. இது பிசாசினால் உண்டாகிறது. பிள்ளைகள் வளர வளர தாங்கள் யார் என்ற ஒரு சந்தேகத்திற்கு உள்ளாகிறார்கள். பெண்கள் தங்களை ஆண்கள் என்றும், ஆண்கள் தங்களை பெண்கள் என்றும் கூறிக்கொண்டு, அதற்கேற்ற சிகிச்சைகளை மேற்கொள்ளவும் செய்கிறார்கள். இதைக்காட்டிலும் ஒரு சிலர் தங்களை பூனை, ஆமை என்று மிருகங்களாக அழைத்துக்கொண்டு, அதைப்போல நடப்பதும் சகஜமாகிவிட்டது. ஒரு அம்மா ஆமை போல ஒரு கூடை வைத்து ஆமை மாதிரி தலையை வெளியே காட்டி நடப்பார்கள். இன்னொரு நபர் தன்னை பூனை என சொல்லிக்கொண்டு, பூனை போல முகத்தில் மீசை வரைந்துக்கொண்டு, இரண்டு கைகளை ஊன்றி நான்கு கால்களில் நடப்பார்கள். இதற்கு அரசாங்கமும் அங்கீகாரம் கொடுத்துள்ளது. பிரியமானவர்களே, ஜனங்கள் தாங்கள் என்ன செய்துக்கொண்டிருக்கிறோம் என்பதையே அறியாமல் வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த அறியாமைக்காக பல இலட்சங்களை செலவு செய்கிறார்கள், பலவற்றை தியாகம் செய்கிறார்கள். அதனால் ஆரம்பத்திலிருந்தே ஆண்டவர் தீங்கை படைத்து அவற்றை அழித்துப்போடுகிறார்.

**ஒளியைப் படைத்து, இருளையும் உண்டாக்கினேன், சமாதானத்தைப் படைத்துத் தீங்கையும் உண்டாக்குகிறவர் நானே, கர்த்தராகிய நானே இவைகளை யெல்லாம் செய்கிறவர். (ஏசா.45:7)**

கர்த்தரை விட்டு தூரம் போகும்பொழுது தீங்கு வருகிறது. சில நேரங்களில் நம் கவனக் குறைவினாலும் தீங்குகள் ஏற்படுகிறது.

தாவீது பாவம் செய்தப்பொழுது அவனுக்கு தீங்கு வந்தது. ஒரு பெண்ணால் தீங்கு வந்தது. அவன் வீட்டில் மேலும் மேலும் ஏராளமான பெண்களை அவன் சேர்த்துக்கொண்ட தினிமித்தம் சமாதானம் இல்லை. அவன் தனது மூன்று குமாரர்களை கொடூரமான கொலையினால் இழக்கிறான். இவையெல்லாம் பாவத்தினால் வருகிற தீங்கான காரியமாக இருக்கிறது. இன்னொரு முறை தாவீது இஸ்ரவேல் மற்றும் யூதா ஜனங்களின் எண்ணிக்கையை இலக்கம் பார்த்தபொழுது கர்த்தருடைய கோபத்திற்கு உள்ளானான். அதனால் பெரிய தீங்கு ஏற்பட்டு ஜனங்களில் எழுபதினாயிரம் பேர் செத்துப்போனார்கள். **அப்பொழுது தாவீது காத்தை நோக்கி: கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன், இப்பொழுது நாம் கர்த்தருடைய கையில் விழுவோமாக,**

**இப்பொழுது நாம் கர்த்தருடைய கையில் விழுவோமாக, அவருடைய இரக்கங்கள் மகா பெரியது, மனுஷர் கையில் விழாதிருப்பேனாக என்றான். 2சாமு.24:1–16** கர்த்தர் அடித்தாலும் நம்மை அரவணைக்கிற தேவன். ஆகவே தேவனாகிய கர்த்தரிடம் திரும்பி வாருங்கள். அவர் தீங்கிற்கு மனஸ்தாபப்படுகிறவர்.

தீங்கு என்று சொல்லும்போது அநேக காரியங்கள் அதில அடங்கும். இன்றைக்கு ஏராளமான மக்களிடம் தற்பெருமை, அகங்காரம், மேட்டிமை இருக்கிறது.படிப்பு,பணம், வீடு, ஆஸ்தி மற்றும் ஜாதியைக்குறித்தபெருமை, ஊழியத்தில் வரங்களை குறித்த பெருமை வரும்பொழுது அங்கு சமாதானம் இருக்காது.

இயேசுகிறிஸ்து வாழ்ந்தப்பொழுது அவர் செய்த அற்புதங்களுக்கு அளவே இல்லை. மலையில் மறுரூபமானப்போது சீடர்களிடம் சொல்ல வேண்டாம் என கட்டளை கொடுத்தார். அதிசயங்களை வெளியே சொல்லாமல் தாழ்மை உள்ளவராக வாழ்ந்தார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உங்கள் மத்தியில் இருந்தால் தீங்கு வராது. அவர் உங்கள் மத்தியில் வாழ வேண்டும் என்றால் நீங்கள் எல்லாவற்றிலும் தாழ்மை உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

இன்றைக்கு அதிக வட்டி வாங்குகிறவர்கள், மீட்டர் வட்டி வாங்குகிறவர்கள் எல்லாம் பெருகிகொண்டு இருக்கிறார்கள். இது அநியாயம். லஞ்சம் வாங்குவது அநியாயம். ஏனென்றால் தங்கள் தாலியை விற்று, வீட்டை விற்று லஞ்சம் தருகிற நிலைமைக்கு மக்கள் உள்ளாகிறார்கள். ஒரு வேலைக்காக, ஒரு பதவிக்காக திருச்சபையில் லஞ்சம் வாங்கக் கூடாது. தசம பாகத்தை கொடுக்காமல் இருப்பதும்கூட அநியாயம்.

வேதத்தை தங்களுக்கு ஏற்றபடி எடுத்து பிரசங்கம் செய்யக்கூடாது. வேதத்தில் ஒரு வசனத்தை வைத்து பிரசங்கம் செய்வது சரியான முறை அல்ல. அது வேதப்புரட்டு. ஆதியாகமம் துவங்கி, வெளிப்படுத்தல் வரை உள்ள வசன குறிப்புகளை எடுத்து வைத்து பிரசங்கம் செய்ய வேண்டும்.

கர்த்தருக்கு முன்பாக பரிசுத்தமாக இருக்கவேண்டும். நம் உடை, நடை, பாவனையில் நாம் கவனமாயிருக்க வேண்டும். இன்றைக்கு வாலிப பிள்ளைகள் தங்களுக்கு ஏற்ற போதகர்களை தேடி செல்லுகிறார்கள். இடறல் உண்டாக்குகிறவர்களுக்கு ஐயோ என வேதம் சொல்லுகிறது. எந்த ஒரு ஆணும், ஒரு பெண்ணும் பிறருக்கு இடறல் உண்டாக்ககூடாது. உங்களை பார்க்கும்பொழுதே ஒருவித பரிசுத்த பிரசன்னம் இருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட எந்த பாவத்தின் நிமித்தம் உங்களுக்கு தீங்கு வந்தது. நீங்கள் செய்த அநியாயம் என்ன? ஒருவேளை நாவினால் தவறு செய்து இருக்கிறீர்களா? தெரிந்தோ தெரியாமலோ நீங்கள் செய்த அனைத்து குற்றங்களையும் அகற்றுங்கள். தேவ சமூகத்தில் அழுது உங்கள் குற்றங்களை அறிக்கை செய்து விட்டுவிடுங்கள். அப்பொழுது உங்கள் மேல் கர்த்தர் இரக்கம் காட்டுவார். கர்த்தர் நினிவே பட்டணத்தை அழிக்காமல் காத்தது போல உங்களையும் காப்பார். தாவீதை அழிக்காமல் காத்தார். நீங்கள் மனந்திரும்பும்பொழுது தீமையை உங்களை விட்டு அகற்றுவார்.

பல வருடங்களுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவத்தை கூறுகிறேன். ஒரு தம்பதியினருக்கு பிறந்த இரண்டு பிள்ளைகளுடைய கையும் வளைந்து திரும்பிய நிலையில், எந்த ஒரு வேலையும் செய்யமுடியாதபடி உபயோகமற்ற நிலையில் இருந்தது. அதற்காக இந்தியா மற்றும் வெளிநாடு முழுவதும் உள்ள பல ஊழியர்களை சந்தித்து ஜெபித்து பார்த்தார்கள். ஒரு மாற்றமும் வரவில்லை. அப்படியே இருந்தது. முடிவில் என்னிடம் ஜெபிக்க வந்தார்கள். உலகம் முழுவதும் உள்ள எல்லா ஊழியக்காரர்களிடமும் சென்று விட்டோம். ஒன்றும் மாறவில்லை. இறுதியாக உங்களிடம் வந்துள்ளேன் என்றார். நான் அவரிடம், 'நீங்கள் தலைமை ஆசிரியரா? என்றேன்.

எப்படி உங்களுக்கு தெரியும் என கேட்டார். மருத்துவ படிப்பிற்கான சீட்டு கிடைக்க, நீங்கள்

வாங்கிக்கொண்டு அதிக மதிப் பெண்கள் போட்டிருக்கிறீர்கள் தானே என்றேன். அதை மறைப்பதற்கு உயர் அதிகாரிகளுக்கு பணத்தை கொடுத்து இருக்கிறீர்கள். நீங்கள் இதை ஒத்துக்கொள்வீர்கள் என்றால் பிள்ளைகளின் கை சரியாகிவிடும் என்றேன். இதுக்கு தான் நான் உங்களிடம் வராமல் இருந்தேன் என கோபமாக எழுந்து சென்றுவிட்டார். தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் கெட்டுப்போவார்கள். **தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள், வேதத்தைக் காக்கிறவனோ பாக்கியவான். நீதி.29:18** இத்தகைய பாவங்களை செய்துவிட்டு காணிக்கை கொடுத்துவிட்டால் பாவம் நீங்காது, தீங்கும் நீங்காது. பாவத்தை விட்டுவிடுங்கள். தீங்கு உங்களை அணுகாது.

## நல்லவர்களுக்கு வரும் தீங்குகள்!

தீங்கு திடீர் திடீரென வரும். யாத்தி.14-ம் அதிகாரத்தில் சிவந்த சமுத்திரத்தண்டை நின்றிருந்த மக்கள் தாங்களுக்கு தீங்கு வந்ததென்று கண்டார்கள்.

ஆபிரகாம் கர்த்தரை நம்பி ஊர் தேசத்தை விட்டு புறப்பட்டு சென்றான். ஊர் என்றால் ஆறு என அர்த்தம். ஆறுகள் நிரம்பின இடம் ஊர். பதான்அராம் நதிகள் சூழ்ந்த இடத்திற்கு வருகிறான். ஆனால் ஆபிரகாமுக்கு அடுத்தடுத்து தீங்கு வந்தது. முதலில் ராஜா ஆபிரகாமின் மனைவியை கொண்டு போகிறான். அடுத்து பஞ்சம் வந்தது. சகோதரனாகிய லோத்துடன் சண்டை ஏற்பட்டு பிரிய வேண்டிய நிலை ஏற்படுகிறது. சாராய் அவசரப்பட்டதினிமித்தம் ஆகார் உள்ளே வந்தாள். தொடர்ந்து வரிசையாக பிரச்சனைகள் வருகிறது.

யோபை பாருங்கள். அவன் வாழ்வில் எங்கிருந்து தீங்கு வந்தது. சாத்தானால் தீமை வந்தது. நம்முடைய விசுவாசத்தை கெடுக்க சாத்தான தீமையை கொண்டு வருவான். திடீரென கண் தெரியாமல் போய்விடுகிறது. இவ்வாறு தீங்கு யாருக்கு எப்பொழுது வரும் என தெரியாது. **நன்மைக்குக் காத்திருந்த எனக்குத் தீமை வந்தது, வெளிச்சத்தை வரப் பார்த்துக்கொண்டிருந்த எனக்கு இருள் வந்தது. யோபு 30:26** யோபு பரிசுத்தரை துணையாக கொண்டேன். என் கண்களினால் தீமை செய்யவில்லை என கூறுகிறான். **என் கண்களோடே உடன்படிக்கை பண்ணின நான் ஒரு கன்னிகையின்மேல் நினைப்பாயிருப்பதெப்படி? யோபு 31:1**

முப்பத்தாறு வருடங்களுக்கு முன்பு ஒரு கூட்டத்தில் பங்கேற்கும்படி திருநெல்வேலிக்கு நான் காரில் சென்றுக்கொண்டிருந்தேன். வழியில் துவரங்குறிச்சி அருகிலிருந்த மாங்களம்பட்டியை கடந்து மிக வேகமாய் டிரைவர் காரை செலுத்திக் கொண்டிருந்தார். திடீரென்று கார் வேகமாக எதிர்புறமாய் இருந்த ஒரு புளிய மரத்தின் மீது மோதியது. புளிய மரமே காருக்குள் வந்ததுபோல இருந்தது. அந்த அளவிற்கு கார் சுக்கு நூறாக நொறுங்கிப்போய் நின்றது. அதில் பயணித்த நான்கு பேரும் பலத்த காயங்களோடு உயிருக்கு போராடிக்கொண்டிருந்தோம். அந்த நிமிடத்தில் என்னுடைய ஆவி பிரிந்து மேலே சென்றது. சத்தம் கேட்டு கிராமத்து மக்கள் ஓடிவந்து காவல் துறையினருக்கு தகவல் கொடுத்தனர். நான் சுயநினைவற்று கிடந்தேன். என் ஆத்துமா பரலோக வாசலுக்கு சென்றது. அங்கிருந்த தூதன் **என்னிடம் "இது உன்னுடைய நேரமல்ல, பூமியில் உன்னுடைய வேலை இன்னும் முடிவடையவில்லை" என்று சொல்லி, என்னைத் திருப்பி அனுப்பினான்.** அதே நேரத்தில் போக்குவரத்து காவல்துறை அதிகாரி ஒருவரும், அரசாங்க மருத்துவர் ஒருவரும் விபத்து நடந்த இடத்திற்கு வந்திருந்தனர். அந்த மருத்துவர் என்னை கண்டவுடன் "இவர் இறந்து விட்டார். முதலில் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிற மற்றவர்களை காப்பாற்றுவோம்"

என்று கூறினார்களாம்.

**தேவனுக்காக நான் இன்னும் அநேக காரியங்களை செய்ய வேண்டியிருந்த படியால், தேவன் தாமே எனக்கு ஜீவனை கொடுத்தார். நான் மீண்டும் உயிர்பெற்றேன். நான் மீண்டும் உயிரோடு வந்ததைக் கண்டு, அங்கிருந்த கிராமத்து ஜனங்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். மற்றவர்களின் உதவியோடு நான் காரை விட்டு வெளியே வந்தேன்.** 28 இடங்களில் உள் காயங்கள் L3 L4 Spine Fracture, இதோடு கூட என் கண்களின் பார்வையும் சிதற ஆரம்பித்தது. அதிக காய்ச்சலோடு, உடல் வீங்கிய நிலையில், வாழை இலையில் படுக்க வைத்திருந்தார்கள். வாழ்நாள் எல்லாம் சக்கர நாற்காலி அல்லது படுத்த படுக்கை என்று மருத்துவர்கள் கூறினார்கள். ஆனால் அன்று இரவு இயேசு மீண்டும் எனக்குக் காட்சியளித்து என்னை சுகப்படுத்தி, படுக்கையிலிருந்து எழும்ப வைத்து, ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டத்திற்கு நியமித்தபடியே அடுத்த நாளே டாக்சியில் போக வைத்தார். இவ்வாறு சடுதியாக வருகிற தீங்குகளுக்கும் தேவன் நம்மை பாதுகாக்கிறார்.

'நான் யாரையும் ஏமாற்றவில்லை. ஆனால் வீட்டில் இந்த தீங்கு, பிரச்சனை என சொல்பவர்கள் பலர் உண்டு. பிசாசு பொறாமையினால் உங்களுக்கு தீமையை கொண்டு வருவான். எண்ணிலடங்காத தீமைகள் வந்தாலும் கர்த்தர் உங்களுக்கு துணையாக இருந்து உங்களை விலக்கி காப்பார். தீங்கு நாளில் கர்த்தரே அடைக்கலமாகவும் இருப்பார். ... **தீங்குநாளில் நீரே என் அடைக்கலம். எரே.17:17.** யோபுக்கு தீமை வந்தது. ஆனால் கர்த்தர் காப்பாற்றினார்.

**சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான், தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்.**
**கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார், பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான். அவன் சத்துருக்களின் இஷ்டத்திற்கு நீர் அவனை ஒப்புக்கொள்.படுக்கையின்மேல் வியாதியாய்க்கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார், அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப்போடுவீர். சங்.41:1-3**

S.J.Saves Trust மூலமாக நான் 500 பிள்ளைகளை போஷித்து வருகிறேன். அவர்கள் நன்றாக படிப்பதற்கு ஏற்ற வசதிகளை செய்து, நல்ல ஆசிரியர்களைக் கொண்டு மாலை நேர வகுப்புகளை நடத்தி வருகிறோம். அத்துடன் அவர்களுக்கு இரவு உணவு கொடுக்கிறோம். இந்த பிள்ளைகளின் பெற்றோர் கல் உடைக்கும் தொழில் செய்பவர்கள். இத்தகைய சிறுமைப்பட்ட பிள்ளைகளை நான் போஷிப்பதால் ஆண்டவர் என்னை காப்பாற்றி வருகிறார். அநேக மரண உபாதைகளுக்கு என்னை தப்புவித்து வருகிறார். **நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர், உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும். சங்.23:4** யோபு சிறுமைப்பட்ட பிள்ளைகள் மேல் சிந்தையாயிருந்தான். தீங்கிலிருந்து கர்த்தர் தாமே அவனை விடுவித்தார். யோசேப்புக்கு அவன் சகோதரர்கள் செய்த தீமையை கர்த்தர் நன்மையாக மாற்றினார். **(ஆதி.50:20)**

## ஊழியம் செய்பவர்களுக்கு வரும் தீங்குகள்!

கடைசியாக கர்த்தருக்கு ஊழியம் செய்த பவுல் ஏராளமான தீங்குகளை அனுபவித்தேன் என சொல்லுகிறான். கிறிஸ்துவுக்காக அதிகமாய் பிரயாசப்பட்ட பவுல் காவல்களில் வைக்கப்பட்டான். யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிக்கப் பட்டான், கல்லெறியப்பட்டான், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் சிக்கிக்கொண்டான், அநேகந்தரம் பிரயாணம் பண்ணினான்

சுயஜனங்களால் வந்த மோசங்கள் ஏராளம். பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும், தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தான். **(2கொரி.11:23-27)** இவ்வாறு கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் தீங்கின் காலம், நெருக்கத்தின் காலம் வருவதுண்டு. கலங்காதீர்கள். **உன்னில் மீதியாயிருப்பவர்கள் நன்மையடைவார்கள், தீங்கின் காலத்திலும் நெருக்கத்தின் காலத்திலும் உனக்காக நான் சத்துருவுக்கு எதிர்ப்பட்டு, உனக்குச் சகாயஞ் செய்வேன் என்று மெய்யாகவே சொல்லுகிறேன். எரே.15:11**

நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் பிதாவை தன் தந்தை என சொல்லியதால் சிலுவை மரணத்திற்கு உள்ளாக்கப்பட்டார். இயேசு சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்தப் பொழுது அவரை பலவிதமாக நிந்தித்தார்கள். ஆனால் தேவன் அவரை மரண உபாதைக்கு விட்டுவிடவில்லை. பிதா இயேசுவை கைவிட வில்லை. மூன்றாம் நாள் உயிரோடு எழும்பும்படி செய்தார். **(1கொரி.15:54-55)**

இன்றைக்கும் நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம். தேவனுடைய ஊழியத்தை செய்கிற பலருக்கு எதிர்பாராத நேரத்தில் பயங்கரமான ஆபத்துகள், தீங்குகள் நேரிடத்தான் செய்கிறது. மணிப்பூரில் பல தேவாலயங்கள் இடிக்கப்பட்டது. கிறிஸ்தவர்கள் பலர் தங்கள் ஜீவனை இழந்தார்கள். உலகெங்கிலும் கிறிஸ்துவுக்காக ஏராளமான விசுவாசிகள், ஊழியர்கள் துன்பங்களை அனுபவித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இருப்பினும் தீமையிலிருந்து இரட்சிக்கிற கர்த்தர் நமக்குண்டு. **கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்,... 2தீமோ.4:18**

கர்த்தர் உங்களையும் எல்லாத்தீங்கிற்கும் விலக்கிகாப்பார். கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறவர்களுக்கு அவமானம் வரும், நிந்தை வரும். சோர்ந்து போகாதீர்கள். உற்சாகமாய் ஊழியம் செய்யுங்கள். **ஆகையால், தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். எபே.6:13**

கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் வீணாகாது என உறுதியாக நம்புங்கள். **ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக. (1கொரி.15:58)**



# வங்கிக் கணக்குகளின் விபரம்



**MINISTRY OF JESUS**
**A/C NO. 10848474869**

**ANBARIN OOZHIYAM**
**A/C NO. 10848559426**

**DR. ANANDA STIRA**
**A/C NO. 10848469699**

**IFS Code: SBIN 0000930**
**State Bank of India, Cantonment, Trichy Main Branch.**

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற
எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள்.
**(10.00 AM - 6.00 PM)**

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை

அனுப்புவதற்கான எளிய வழிகள்

"இந்த
QR code-ஐ உங்கள்
செல்போனில் ஸ்கேன் செய்து
அல்லது
95004 87061 என்ற எண்
மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும்
செயலிகள்
மூலமாகவும் காணிக்கை
அனுப்பலாம்."



மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)
Online Donation (Website) || Bank Account / QR Code
UPI / Google pay / Paytm / Phonepe

UPI · Google Pay · Paytm · PhonePe

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.

# புதிய கல்வியாண்டிற்குள் செல்லுகிற மாணவர்களுக்கான விசேஷித்த ஜெபம்!

**ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி, என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள். நீ அதை மேன்மைப்படுத்து, அது உன்னை மேன்மைப்படுத்தும். நீ அதைத் தழுவிக்கொண்டால், அது உன்னைக் கனம்பண்ணும். அது உன் தலைக்கு அலங்காரமான முடியைக் கொடுக்கும், அது மகிமையான கிரீடத்தை உனக்குச் சூட்டும். (நீதி.4:7–9)**

அன்பின் கர்த்தாவே, இந்த புதிய கல்வியாண்டிற்குள் செல்லுகிற அன்பு பிள்ளைகள் ஒவ்வொருவரையும் நீர் கண்ணோக்கிப் பாரும். அவர்கள் முதலாவது உமக்கு பயப்படும் பயத்தில் வளர உதவி செய்யும். கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என்பதை அவர்கள் உணரும்படி செய்யும். சர்வ வல்ல தேவனுக்கு பயப்படுவதன் மூலமாக மிகுதியான ஞானத்தை அவர்கள் பெற்றுக் கொள்ளுவார்களாக!

தகப்பனே, பிள்ளைகள் ஞானத்தில் சிறந்தவர்களாக இருந்தாலும் அல்லது ஞானத்தில் குறைவுள்ளவர்களாக இருந்தாலும், சரீரத்தில் பெலவீனமாக இருந்தாலும் அன்பு பிள்ளைகள் மீது நீர் இரக்கம் வைத்து, அதிக ஞானத்தையும், விசேஷித்த அறிவையும், சமயோசித புத்தியையும் தாரும். **உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். யாக்.1:5–ன்படி** ஞானத்தில் குறைவுள்ள பிள்ளைகளுக்கு தேவையான ஞானத்தை தந்தருளும்.

சாலொமோனுக்கு நீர் எட்டாத ஞானத்தை கொடுத்தீர். அதேபோல உம் அன்பு பிள்ளைகள் மேற்படிப்புக்கு செல்லும்போது அந்த படிப்பிற்கு ஏற்ற ஞானத்தையும் கிருபையையும் தாரும். நீண்ட நேரங்கள் அவர்கள் படிக்கும்பொழுதும், டியுஷன் செல்லும்பொழுதும் அவர்களை காத்துக்கொள்ளும். தேவையற்ற நட்பை அவர்கள் விட்டுவிடும்படி செய்யும். நேரத்தை வீணாக்காமல் படிப்பில் கவனம் செலுத்த செய்யும். ஏனென்றால் எல்லாவற்றையும் விட ஞானமே மேலானது என்பதை அவர்கள் அறிந்துக்கொள்ளட்டும்.

நீர் ஞானத்தினால் உலகத்தை உண்டாக்கினீர். நீர் சிறுவயதிலேயே வேத போதகரைவிட அதிக ஞானத்தை உடையவராக விளங்கினீர். தாவீது அவன் செய்த எல்லா காரியத்திலும் ஞானமுள்ளவனாய் இருந்தான். அளவிட முடியாத ஞானத்தை யோசேப்பு பெற்றிருந்தான். தானியேலும் அவன் நண்பர்களும் பத்து மடங்கு சமர்த்தராக இருந்தார்கள். அவ்வாறு அன்பு பிள்ளைகளையும் மாற்றும்.

பிள்ளைகள் தீய வழியில் செல்லாமல் கெட்ட நண்பர்களோடு சேராமல் படிப்பில் கவனம் செலுத்தட்டும். அவர்களுக்கு விசுவாசத்தையும் கற்றுக்கொண்டதை மனதில் நிறுத்தி செயல்பட உதவி செய்யும். ஞாபகசக்தியை அதிகப்படுத்தும். எந்த கடினமான பாடங்களையும் அவர்கள் எளிதில் புரிந்துக்கொள்ளக்கூடிய கிருபையை தாரும்.

கர்த்தாவே, பிள்ளைகள் தங்களுக்கு பாடங்களை சொல்லி தரும் ஆசிரியர்களை மதிக்கும்படி செய்யும்.

இளம் வயதிலேயே தேவையற்ற பாலியல் தொடர்புகள், வாட்ஸ் அப், யூ டியூப் விளையாட்டுகள் அனைத்தையும் தவிர்த்து, எந்த தீய நண்பர்களோடும் சேராமல் ஊர் சுற்றுவதை நிறுத்தும்படி

செய்யும். தீய சோதனைக்கு வழிநடத்தும் சாத்தானை அப்புறப்படுத்தும்.


ஒரு சில ஏழை பிள்ளைகள் பள்ளி, கல்லூரி கட்டணம் செலுத்த முடியாமல் கஷ்டப்படலாம். அவர்களுக்கு நீர் உதவி செய்யும். சரீர பெலவீனமுள்ளவர்களுக்கு சுகத்தை தாரும் கர்த்தாவே. கொஞ்சத்தில் உண்மையுள்ளவர்களை நீர் அநேகத்தின் மேல் அதிகாரியாக வைப்பீர் என்பதை அவர்கள் நம்பும்படி செய்யும். விடாமுயற்சியும் தாழ்மையும் உள்ளவர்களாக வளரட்டும். அவர்களை நீர் கைவிடாதிரும் இயேசு சுவாமி.

தினந்தோறும் வேதம் வாசித்து, ஜெபிக்கும் பழக்கத்தை கற்றுத்தாரும். பெற்றோரிடத்தில் நல் ஆசி பெற்று பள்ளி மற்றும் கல்லூரிக்கு செல்ல தயை செய்யும். எதையும் மறைக்காமல் தங்கள் பெற்றோரிடத்தில் எல்லாவற்றையும் பகிர்ந்துக் கொள்ளும்படி செய்யும். எல்லாவித பாலியல் சோதனைகளிலிருந்து விடுவியும்.

அவர்கள் படிக்கும் பாடங்களில் நல்ல மதிப்பெண்கள் எடுத்து தங்கள் பெற்றோருக்கு கல்வி நிறுவனங்களுக்கும், நம் நாட்டிற்கும் பெருமை சேர்க்கிற பிள்ளைகளாக மாற்றும். உற்சாகமான ஆவியை தாரும். ஆசீர்வதியும். தீர்க்காயுசை தாரும். பெலப்படுத்தும். மேன்மைப்படுத்தும். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் எங்கள் பரிசுத்த பிதாவே ஆமென்.

**அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார். (1கொரி.1:31)**
**அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது. (கொலோ.2:3)**

அன்பு பெற்றோரே, உங்கள் பிள்ளைகளுக்காக இந்த ஜெபத்தை தினந்தோறும் நீங்கள் ஏறெடுங்கள். கர்த்தர் நிச்சயம் அவர்களை ஆசீர்வதிப்பார். கர்த்தர் தாமே உங்கள் பிள்ளைகளை ஆசீர்வதித்து உயர்ந்த நிலைக்கு கொண்டு வருவாராக!



# கள்ளக்குறிச்சி சிலுவை பெருவிழாவின் சிறப்பு அறிக்கை

அநாதி தேவனின் அற்புத திட்டத்தின்படி ஏப்ரல் மாதம் 18,19,20 ஆகிய தேதிகளில் கள்ளக்குறிச்சியில் சிலுவை பெருவிழா கூட்டமானது நடைபெற்றது. அநேக வருடங்களுக்குப் பிறகு Dr. ஆனந்த ஸ்திரா மற்றும் Mrs. மார்கிரேட் ஸ்திரா அவர்களின் பெரும் முயற்சியால் மூன்று நாள் கூட்டங்கள் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. கர்த்தரால் தெரிந்துக்கொள்ளப்பட்ட சில போதகர்களும் கலந்துக்கொண்டார்கள். ஆற்காடு லுத்தரன் சர்ச் போதகர் மற்றும் தாராள உள்ளம் கொண்ட அன்பரின் ஊழிய பங்காளர்களின் உதவியாலும், சபை விசுவாசிகளின் சில உதவிகளாலும் கூட்டங்கள் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கள்ளக்குறிச்சியை சுற்றியுள்ள பல கிராமங்களிலிருந்து மக்கள் வருவதற்கான வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இறுதி வரை ஆண்டவரின் வல்லமையான பிரசன்னம், அபிஷேகம், சமாதானம், சந்தோஷம், விடுதலையை உணர முடிந்தது.

கூட்டத்திற்கு வந்திருந்த மக்களில் அநேகர் விடுதலை அடைந்தார்கள். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

Mrs. மார்கிரேட் ஸ்திரா அவர்களின் பாடல்களை கேட்டு மக்கள் சமாதானம் பெற்றார்கள்.

ஜார்ஜ் என்னும் சகோதரன் தனி வாகனத்தில் அழைத்து வரப்பட்டார். பத்து வருடங்களாக அவரால் நடக்க முடியவில்லை. ஜெப நேரத்தில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள், அந்த சகோதரனை, பெயர் சொல்லி அழைத்து, 'பரம்பரை சாபம், பில்லி சூனியம் மற்றும் மாந்திரீக கட்டினால் பாதிக்கப்பட்டு, நடக்க முடியாமல் மற்றவர்கள் உதவியுடன் கூட்டத்திற்கு வந்திருக்கிற உங்களை கர்த்தர் தாமே விடுதலையாக்குகிறார்' என்று கூறியபொழுது, அவர் எழுந்து யாருடைய உதவியும் இல்லாமல் தனியாக நடக்க ஆரம்பித்து கர்த்தரை மகிமைப்படுத்தினார்.

மேரி என்கிற சகோதரியை பெயர் சொல்லி அழைத்து 7 வருடத்திற்கு முன்பு நடந்த விபத்து, வீட்டின் பல்வேறு பிரச்சனைகளை சொல்லி அவர்களுக்காக ஜெபித்தார்கள். அந்த சகோதரி சமாதானத்துடன் சென்றார்கள்.

டேனியல் என்பவருக்கு தேவன் தரப்போகிற புதிய பாடல் மற்றும் அவர் பெறப்போகிற வரங்களைக் குறித்து சகோதரர் தீர்க்கதரிசனமாக சொன்னார்கள்.





Pr. கார்ல் பெக்கர் & Mrs. ஜெஸி







அப்பச்சா என்னும் சகோதரியின் வயிற்றில் மிகப்பெரிய கேன்சர் கட்டி இருந்தது. ஜெப நேரத்தில் பெயர் சொல்லி அழைக்கப்பட்டு சகோதரர் ஜெபித்தார்கள். அன்று இரவே அந்த கட்டி உடைந்து மல, ஜல வழியாக வெளியேறியது.

தற்கொலை செய்துக்கொள்ள வேண்டும் என்று சென்றுக்கொண்டிருந்த ஒரு சகோதரி ஏதேச்சையாக கூட்டத்திற்கு வந்தார்கள். அவர்களையும் சகோதரர் பெயர் சொல்லி அழைத்து ஜெபித்தார்கள். அந்த நேரமே அவர்களுக்குள் இருந்த தற்கொலை எண்ணம் நீங்கியது. மனதில் தேவ சமாதானம் உண்டானது.

இவ்வாறு பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் சகோதரர் அவர்கள் அநேகரை பெயரை சொல்லி அழைத்து, துல்லியமாக மக்களின் பிரச்சனைகளை சொல்லி ஜெபித்தார்கள். கர்த்தர் தாமே அவர்களுக்கு அற்புத விடுதலையை தந்தார்.

**இந்த கூட்டத்திற்கு பெயர் தெரிவிக்க விரும்பாத பிரசித்தம் பெற்ற மூன்று மருத்துவர்கள் ஸ்பான்சர் செய்துள்ளார்கள். அவர்களுக்கு எங்களுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். அத்துடன் அன்பு பங்காளர்கள் Bro.தனசேகரன், Prof. சுரேஷ் பாபு மற்றும் உதவி செய்த இரண்டு பங்காளர்களுக்கும் எங்களுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.**

**இத்தகைய நற்செய்தி பெருவிழாக்கள் மற்றும் கூட்டங்களை தொடர்ந்து நடத்துவதற்காக ஜெபியுங்கள். கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுகிற காணிக்கைகளை கொடுத்து கூட்டங்களை நடத்துவதற்கு உதவி செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.**

# கர்னூல் கூட்டத்தில் கலந்துக்கொண்ட மக்களில் ஒரு பகுதியினர்










மார்த்தாண்டத்தில்
ஜூன்
07
சனிக்கிழமை
அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்
காலை 9:30 மணி முதல்
மதியம் 2:00 மணி வரை
YMCA Hall, அரசு மருத்துவமனை அருகில்,
வெட்டுவெண்ணி ஜங்சன்,மார்த்தாண்டம்
தேவ செய்தியாளர்
Dr. ஆனந்த ஸ்திரா
தொடர்புக்கு : செல் 9488845627, 0431-2741922


திருநெல்வேலியில்
பங்காளர்கள் சந்திப்பு
நேரம்
மாலை 4:00 மணி முதல்
இரவு 9:00 மணி வரை
ஜூன்
08
ஞாயிற்றுக்கிழமை
தேவ செய்தியாளர்
Dr.ஆனந்த ஸ்திரா
இடம்:
கிரேஸ் ஏசி ஹால், (LIC வளாகம்)
புது பேருந்து நிலையம் பின்புறம்,
67, தெற்கு பைபாஸ் ரோடு, திருநெல்வேலி - 5
தொடர்புக்கு : செல் 9488845627, 0431-2741922

# துதி அறிக்கை

## திருமணம் நடைபெற்றது!



2017-ம் ஆண்டு முதல் 2022-ம் ஆண்டு வரை நாங்கள் ரொம்ப கஷ்டமான சூழலில் இருந்தோம்.

2022-ம் ஆண்டு திண்டுக்கலில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு மிகுந்த பாரத்துடன் வந்து கலந்துக்கொண்டேன். செய்தி முடிந்து ஜெப வேளையில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் என்னை பெயர் சொல்லி அழைத்து, 'உங்கள் மகனுடைய திருமணம் நேர்த்தியாக நடைபெறும்' என தீர்க்கதரிசனமாக சொன்னார்கள். ஐயா சொன்னபடியே 2023-ம் ஆண்டு எங்கள் மகனுடைய திருமணம் நேர்த்தியாக நடைபெற கர்த்தர் உதவி செய்தார். அதற்காக கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். தொடர்ந்து ஊழியத்தை தாங்குகிறேன்.

**திருமதி. ஜாய்ஸ் சந்திரகலா, திண்டுக்கல்**

## கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை!

நாங்கள் கடனில் மூழ்கி, சோர்ந்து போய் என்ன செய்வது என தெரியாமல் திகைத்து நின்றோம். நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து Dr. ஆனந்த ஸ்திரா அவர்களிடம் எங்கள் கடன் பிரச்சனைகளை சொன்னோம். ஐயா பாரத்துடன் ஜெபித்தார்கள். கர்த்தர் எங்களை தாங்கி, அற்புதமாக கடன்களை நீக்கி குடும்பமாக பாதுகாத்து வருகிறார். தேவனுக்கே மகிமை! எங்களுக்காக ஜெபித்த ஐயாவிற்கு நன்றி.

**திரு. சுரேஷ், கன்னியாகுமரி.**

## பத்து வருட பிரச்சனை நீங்கியது!

எங்களுடைய வீட்டின் மாடியில் குடியிருந்தவர்கள் எங்களுக்கு அதிக தொந்தரவு களைக் கொடுத்துக்கொண்டு 10 வருடமாக வீட்டை காலிசெய்யாமல் இருந்தார்கள். திருச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து இந்த பிரச்சனைக்காக ஜெபிக்கும்படி ஐயா அவர்களிடம் சொன்னேன். ஐயா ஜெபித்தார்கள். தொந்தரவு செய்த நபர்கள் மூன்று மாதத்தில் வீட்டை காலி செய்து சென்றுவிட்டார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**திரு. ஆஸ்டின் சுந்தர், திருச்சி.**

## வேலையில் பல இலட்சங்கள் வாங்குவான்!

என் மகனுக்கு வேலை கிடைக்காமல் அதிக கஷ்டப்பட்டோம். தூத்துக்குடியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்தப்பொழுது மகனுக்காக ஜெபிக்கும்படி Dr. ஆனந்த ஸ்திரா அவர்களிடம் சொன்னேன் **ஐயா ஜெபித்துவிட்டு, 'சில ஆயிரம் அல்ல, பல இலட்சங்கள் மகன் வாங்குவான்'**

என தீர்க்கதரிசனமாக சொன்னார்கள். அதன்படியே மகனுக்கு வெளி நாட்டில் வேலை கிடைக்கும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். ஐயா சொன்னபடியே மகன் வாழ்வில் நடந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**திருமதி. அன்னபாக்கியம், தூத்துக்குடி.**

## சொந்த வீடு கட்டினோம்!

எங்களுக்கு சொந்த வீடு கட்ட வேண்டும் என்ற வாஞ்சை இருந்தது. மதுரையில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்தபொழுது வீட்டிற்காக ஜெபிக்கும்படி ஐயா அவர்களிடம் சொன்னேன். ஐயா பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். தற்போது சொந்த வீடு கட்டி விட்டோம். அதற்காக தேவாதி தேவனை ஸ்தோத்தரிக்கிறோம்.

**திரு. சர்ச்சில், மதுரை.**

## பிரிந்த குடும்பம் இணைந்தது!

என் அண்ணனின் மகள் திருமணமாகி



கணவருடன் ஏற்பட்ட சில பிரச்சனைகளினால் கணவரை விட்டு பிரிந்து குழந்தையுடன் அண்ணன் வீட்டிற்கு வந்துவிட்டாள். அந்த நேரத்தில் சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் நான் கலந்துக்கொண்டேன். ஜெப விண்ணப்பத்தில் மகள், மருமகன் இடையே உள்ள பிரச்சனை நீங்கி அவர்கள் இணைந்து வாழ ஜெபிக்கும்படி எழுதிக்கொடுத்து சென்றேன். Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் ஜெபித்து எனக்கு பதில் கடிதம் அனுப்பியிருந்தார்கள். அதன்பின் ஒரு சில நாட்களில் அனைத்து பிரச்சனைகளும் நீங்கி இருவரும் இணைந்து சமாதானமாய் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். பிரிந்த குடும்பத்தை இணைத்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**திருமதி. வசந்தி, அஸ்நாபுரம்.**





English Whats App No
+91 94889 32937

Tamil Whats App No
+91 95004 87059




1. அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது. (கொலோ.2:3)

2. ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது. (ரோமர் 11:33)

3. மனுஷனுடைய ஞானம் அவன் முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும். (பிரசங்கி 8:1)

4. நகரத்திலுள்ள பத்து அதிபதிகளைப்பார்க்கிலும், ஞானம் ஞானியை அதிக பெலவானாக்கும். (பிரசங்கி 7:19)

5. புத்திமானுடைய இருதயத்தில் ஞானம் தங்கும். (நீதி.14:33)

6. முத்துகளைப்பார்க்கிலும் ஞானத்தின் விலை உயர்ந்தது. (யோபு 28:18)

7. மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின்மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான். (உபா.34:9)

8. தேவன் சாலொமோனுக்கு மிகுதியான ஞானத்தையும் புத்தியையும், கடற்கரை மணலத்தனையான மனோவிருத்தியையும் கொடுத்தார். (1இராஜா.4:29)

9. அவர் ...ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர். (தானி.2:21)

10. கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். (நீதி.1:7)

11. பூமியின் சகல ராஜாக்களைப்பார்க்கிலும் ராஜாவாகிய சாலொமோன் ஐசுவரியத்திலும் ஞானத்திலும் சிறந்தவனாயிருந்தான். (2நாளா.9:22)

12. நீதிமானுடைய வாய் ஞானத்தை உரைத்து, அவனுடைய நாவு நியாயத்தைப் பேசும். (சங்.37:30)

13. கர்த்தர் ஞானத்தைத் தருகிறார் அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும். (நீதி.2:6)

14. இந்த நாலு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார். (தானி.1:17)

15 அவனுக்கு ஞானத்தையும் புத்தியையும் அறிவையும் அருளி, அவன் சகலவித வேலைகளையும் செய்யும்படி தேவஆவியினாலே அவனை நிரப்பினார். (யாத்தி.35:33)

16 சுதந்தரத்தோடே ஞானம் நல்லது. (பிரசங்கி 7:11)

17 தன் வழியைச் சிந்தித்துக்கொள்வது விவேகியின் ஞானம். (நீதி.14:8)

18 சகல கிழக்கத்திப் புத்திரரின் ஞானத்தையும் எகிப்தியரின் சகல ஞானத்தையும் பார்க்கிலும் சாலொமோனின் ஞானம் சிறந்ததாயிருந்தது. (1இராஜா.4:30)

19 தேவன் தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவனுக்கு ஞானத்தையும் அறிவையும் இன்பத்தையும் அளிக்கிறார். (பிரசங்கி 2:26)

20 ஞானம் கேடகம், திரவியமும் கேடகம் (பிரசங்கி 7:12)

21 ஆலோசனையைக் கேட்கிறவர்களிடத்திலோ ஞானம் உண்டு. (நீதி.13:10)

22 உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன். (லூக்.21:15)

23 அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்துநிற்க அவர்களால் கூடாமற்போயிற்று. (அப்போஸ்.6:10)

24 ....நீதிமானோ அறிவினால் தப்புகிறான். (நீதி.11:9)

25 பூரணரட்சிப்பும் ஞானமும் அறிவும் உன் காலங்களுடைய உறுதியாயிருக்கும்.(ஏசா.33:6)

26 .....விவேகிகளோ அறிவினால் முடிசூட்டப்படுகிறார்கள். (நீதி.14:18)

27 ஞானம் தன்னை உடையவர்களுக்கு ஜீவனைத் தரும் இதுவே அறிவின் மேன்மை. (பிரசங்கி 7:12)

28 ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள். (நீதி.4:7)

29 நம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார் அவருடைய அறிவு அளவில்லாதது. (சங்.147:5)

30 உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். (யாக்.1:5)

# S. J. SAVES TRUST
## (நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை)


மரணத்துக்கு ஒப்பிக்கப்பட்டவர்களையும், கொலையுண்ணப்போகிறவர்களையும் விடுவிக்கக் கூடுமானால் விடுவி. அதை அறியோம் என்பாயாகில், இருதயங்களைச் சோதிக்கிறவர் அறியாரோ? உன் ஆத்துமாவைக் காக்கிறவர் கவனியாரோ? அவர் மனுஷருக்கு அவனவன் கிரியைக்குத் தக்கதாகப் பலனளியாரோ? (நீதி.24:11-12)

ஏழையின் கூக்குரலுக்குத் தன் செவியை அடைத்துக்கொள்ளுகிறவன், தானும் சத்தமிட்டுக் கூப்பிடும்போது கேட்கப்படமாட்டான். (நீதி.21:13)



கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான தேவ பிள்ளைகளே, சுமார் 44 ஆண்டுகளாக **S.J.SAVES TRUST** மூலம் ஏராளமான நற்பணிகளை தேவனுடைய கிருபையினால் செய்து வருகிறோம். அத்துடன் உங்களுடைய ஜெபம் மற்றும் அன்பின் நன்கொடைகளாலும் இயங்கி வருகிறது. ஆம் ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான் என வேதம் சொல்கிறது. (நீதி.19:17) தேசத்தில் ஏழைகள் இல்லாமல் இருப்பதில்லை.

12-ம் வகுப்பு முடித்த பிள்ளைகள் தங்கள் திறமைகளை கண்டுணர்ந்து அவற்றை வளர்த்துக் கொள்ளக்கூடிய 6 மாத சிறப்பு பயிற்சிகளை அவர்களுக்கு தரயிருக்கிறோம்.





## S.J.Saves Trust மூலம் தையல் இயந்திரத்தைப் பெற்றுக்கொண்ட சகோதரி பியூலா





நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த பியூலா என்பவரின் கணவர் சாலை விபத்தில் இறந்துவிட்டார். அவருக்கு  சினட்ரலா, பெனிட்டா என்ற இரு பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள். மூத்த பெண் 8-ம் வகுப்பும், இளைய பெண் 6-ம் வகுப்பு செல்லயிருக்கிறார்கள். Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் கஷ்டங்களை கேட்டறிந்து, பிள்ளைகள் இருவரின் படிப்பிற்கு உதவியாக ரூ.2000 கொடுத்தார்கள். பியூலாவின் வாழ்வாதாரத்திற்கு உதவியாக புதிய தையல் இயந்திரம் வாங்கி தரப்பட்டது. இந்த பணிக்கு உதவி செய்த சகோதரி லூர்து மேரிக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். ஏழை பிள்ளைகளை மறவாமல் உதவி செய்கிற அன்பு சகோதரர் P.S.தனிஸ்லாஸ் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்





மே மாதம் நாமக்கலில் உள்ள பிள்ளைகள் 200 பேருக்கு விடுமுறை வகுப்புகள் எடுக்கப்பட்டு, நல்லொழுக்கங்கள் கற்றுத்தரப்பட்டது. இறுதி நாளில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் பிள்ளைகளை நேரில் சந்தித்து, அவர்கள் வாழ்வில் உயர தேவையான ஆலோசனைகளை வழங்கி, பிள்ளைகளுக்கு அன்பளிப்புகளை வழங்கினார்கள். பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டு சென்றனர்.

இந்த மாதம் முதல் பிள்ளைகள் அனைவரும் பள்ளிக்கு செல்லயிருப்பதால் அவர்களுக்கு பள்ளிக்கு தேவையான உபகரணங்கள், நோட்டுகள் மற்றும் ஸ்கூல் பேக் அனைத்தும் புதியதாக வாங்கி தரவேண்டும்.

ஒரு பிள்ளைக்கு ரூ.1000 வீதம் 500 பிள்ளைகளுக்கு ரூ.5,00,000 வரை  தேவைப்படுகிறது. புதிய கல்வியாண்டில் டியூஷன் சென்டரில் படிக்கிற பிள்ளைகளும் மகிழ்ச்சியுடன் பள்ளி செல்ல நீங்கள் உதவி செய்யுங்கள், தாங்குங்கள்.

இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள், அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். மத்.18:10

S. J. Saves Trust - ல் உள்ள ஏழை பிள்ளைகளுக்கு உதவி செய்ய

Bank A/C.Name : SJ SAVES TRUST
Account No : 019150310875369
Bank Name : Tamilnadu Mercantile Bank
Branch : Palakarai, Trichy.
IFSC Code : TMBL 0000019
A/C Type: Current

# S.J.S.T. கிராமப்புற மருத்துவமனை

சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான், தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார். கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார். பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான் அவன் சத்துருக்களின் இஷ்டத்திற்கு நீர் அவனை ஒப்புக்கொடீர். படுக்கையின் மேல் வியாதியாய்க் கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார். அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப்போடுவீர். (சங்.41:1-3)

இன்றைக்கு பல்வேறு வியாதிகளினால் துன்புறுகிற மனிதர்கள் ஏராளமாக இருக்கின்றார்கள். வியாதிக்குரிய சிகிச்சைகளை தொடர்ந்து மேற்கொள்ள, அதற்கான செலவுகளை சந்திக்க போதுமான வசதிகள் இல்லாமல் பலர் மடிந்து போகிறார்கள்.

அன்பரின் ஊழிய பங்காளராக இருக்கிற ஒரு சகோதரியின் கணவர் சிறுநீரக பிரச்சனையினால் பாதிக்கப்பட்டு, சரியான சிகிச்சை எடுக்க வசதியில்லாத நிலையில் இறந்துவிட்டார்கள். இப்படி நம் நாட்டில் பலர் இருக்கிறார்கள். எனவே கிறிஸ்துவின் அன்பை நாம் அவர்களுக்கு காட்ட வேண்டும். வியாதியஸ்தர்களின் முகத்தில், நான் இயேசுவை காண்கிறேன் என அன்னை தெரசா சொன்னதை நினைவு கூறுவோம். ஆகவே வியாதியஸ்தர்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள்.

ஒவ்வொரு மாதமும் மருத்துவமனைக்கு என பல இலட்சங்களை செலவு செய்கிறோம். இங்கு வருகிற மக்கள் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியவர்கள். ஆகவே குறைந்த கட்டணமே நாம் வாங்கி வருகிறோம். உங்கள் குடும்பத்தின் சார்பாக மருத்துவமனை பணிக்கு தாராளமாக உதவி செய்யுங்கள்.

ஏப்ரல் மாதம் **S.J.S.T.** கிராமப்புற மருத்துவமனை, திருச்சி ஜோசப் கண் மருத்துவமனையோடு இணைந்து இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இந்த முகாமிற்கு சுமார் 75 பேர் பங்குபெற்று கண் பரிசோதனை செய்துக்கொண்டார்கள். இத்தகைய பணிகளை தொடர்ந்து செய்ய நீங்கள் கீழ்க்கண்ட நமது வங்கி கணக்கிற்கு நன்கொடைகளை அனுப்பி தாங்குங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

S.J.S.T. மருத்துவமனை மூலம் நடத்தப்பட்ட இலவச கண் பரிசோதனை முகாம் படத்தொகுப்பு



S. J. S. T. மருத்துவமனை பணிகளுக்கு உதவிசெய்ய

Bank A/C.Name : SJ SAVES TRUST
Account No : 36477148891
Bank Name : State Bank of India
Branch : Cantonment, Trichy Main Brach
IFSC Code : SBIN 0000930
A/C Type: Current

# WANTED
## ACCOUNTANT

(B.Com. / M.Com. Graduates)
Candidates with Experience
Preferred

ministryofjesushr@gmail.com





# உலக செய்திகள்

## இந்தியா – பாகிஸ்தான்




ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலையடுத்து. பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்களை குறிவைத்து இந்தியா அதிரடியாக தாக்குதல் நடத்தியது. இந்தியா நடத்திய தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப் பட்டனர். பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா நடத்திய பதிலடி தாக்குதலால் கோபம் அடைந்த பாகிஸ்தான் இந்தியா மீது தாக்குதல் நடத்தியது. இந்தியா தனது வான் பாதுகாப்பு அமைப்பு மூலம் இந்த தாக்குதலை முறியடித்தது. அதுமட்டும் இன்றி பாகிஸ்தானுக்கு தக்க பதிலடியும் கொடுத்தது. இதில் பாகிஸ்தானில் உள்ள நூர்கான் விமான படைதளம் பலத்த சேதம் அடைந்தது.

பிரமோஸ் ஏவுகணை என்பது மிகவும் ஆபத்தான தாக்குதலை தரும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தியா ரஷ்யா கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்டுள்ளது. இது உலகில் மோசமான ஏவுகணைகளில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இது சூப்பர் சோனிக் குரூஸ் வகை ஏவுகணையாகும். நம் படை பிரிவில் 3 வகையான பிரமோஸ் ஏவுகணை உள்ளது. இந்த ஏவுகணைகள் 3 ஆயிரம் கிலோ எடை கொண்டது. 8.4 மீட்டர் நீளம் கொண்டது. 200 முதல் 300 கிலோ அணு ஆயுதத்தை சுமந்து செல்லும் வல்லமை கொண்டது. இதன் ரேஞ்ச் என்பது 400 முதல் 700 கி.மீ என்ற அளவில் உள்ளது. இந்த ஏவுகணையின் சிறப்பு என்னவென்றால் தரை மற்றும் கடலில் இருந்து வெறும் 3 முதல் 4 மீட்டர் உயரத்தில் எதிரிகளின் ரேடாரில் சிக்காமல் இலக்கை தாக்கி அழிக்கும். மேலும் இதன் வேகம் என்பது மணிக்கு 4,939 கிலோ மீட்டராகும். இதேபோல பாதி வழியில் இந்த ஏவுகணையின் திசையை மாற்றி அமைக்கமுடியும் என்பதால் தான் இது மிகவும் மோசமான ஏவுகணையாக உலகில் பட்டியலிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் இத்தகைய ஏவுகணைகளை வைத்திருந்தாலும்கூட இந்தியாவை ஒப்பிடும்போது அதன் பலம் குறைவுதான். குறிப்பாக நம் நாட்டில் ஏவுகணையை முன் கூட்டியே கணித்து அழிக்கும் ஆயுதங்கள் உள்ளது. இதனால் பாகிஸ்தானின் ஏவுகணைகளை நம்மால் எளிதாக வானிலேயே அழிக்க முடியும். ஆனால் பாகிஸ்தானிடம் அத்தகைய தொழில்நுட்பம் என்பது இல்லை. இதனால் ஏவுகணை தாக்குதல் என்று வந்தால் பாகிஸ்தானை நம் நாடு பந்தாடிவிடும் என்பது உறுதி.

# திருச்சியில் டெலிவரன்ஸ் திருச்சபையின் மூலம் நடைபெற்ற விடுதலை பெருவிழா









Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2025-2027 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

தூத்துக்குடி

# Gama 25-வது வெள்ளி விழா ஆண்டு அபிஷேகப் பெருவிழா 2025

ஜூன் 20 21 22
(வெள்ளி, சனி, ஞாயிறு)

நேரம்: தினமும் மாலை 7:30 மணிக்கு

இடம்: தூய யோவான் பேராலய வளாகம்
நாசரேத், தூத்துக்குடி

*Conducted by*: பவுலி *G.* திலக் சாமுவேல்
*Rev.A.*பொன் செல்வின் அசோக்குமார்
*Rev.M.*ஹென்றி ஜீவானந்தம்
பாடல்கள்: *GAMA Choir*



குறிப்பு: தூத்துக்குடி, திருச்செந்தூர், திசையன்விளை ஆகிய இடங்களுக்கு திரும்பி செல்வதற்கு வசதியாக அரசு போக்குவரத்து பேருந்துகளை ஏற்பாடு செய்துள்ளோம்.

அபிஷேக செய்தியாளர்கள்
Dr.ஆனந்த ஸ்திரா
Dr. ஜேன் ஜாஷ்வா

தொடர்புக்கு : 9488845627, 0431-2741922

திருச்சி

# உங்கள் விடுதலையின் இரவு

ஜூன் 14
(சனிக்கிழமை)

LIVE STREAMING
MY DELIVERANCE CHURCH

நேரம்: மாலை 6:00 மணி முதல்

இடம்
டெலிவரன்ஸ் சர்ச்
அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு
தில்லைநகர், திருச்சி-18



**வாருங்கள்! ஆசீர்வாதம் பெற!!**

பரவசமூட்டும் ஆராதனை
அனல் பறக்கும் தேவவார்த்தை
விடுதலையின் ஜெபம்

தேவ செய்தியாளர்கள்
Rev.Dr.A. ஜாஷ்வா & குடும்பத்தினர்

- கூட்டத்தில் பங்குபெறுகிற அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்படும்
- my deliverance church youtube channel வாயிலாக நேரலையிலும் பார்த்து பயனடையலாம்.
- வியாதி, சத்துரு போராட்டம், கடன் பாரம், வேலை இல்லாமை மற்றும் பல்வேறு பிரச்சனைகளினால் துயரப்படும் மக்களுக்காக சிறப்பு பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,